මධ්‍යම පළාත් සභාවේ කලාප අධ්‍යාපන කාර්යාලය- මාතලේ
மத்திய மாகாண சபையின் வலயக் கல்விக் காரியாலயம் - மாத்தளை
ZONAL EDUCATION OFFICE OF CENTRAL PROVINCIAL COUNCIL- MATALE

# e-Learning Programme - 2020

| Grade - 11 | Assignment - 01 | History |
|---|---|---|

## பகுதி - I

மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்க

1. பின்வருவனவற்றுள் வசப மன்னனின் ஆட்சி அதிகாரப் பரவலைப் பற்றி அறிந்து கொள்ள உதவும் மூலாதாரம்
   1. பனாகடுவ செப்பு சாசனம்
   2. வல்லிபுர பொற்சாசனம்
   3. கல்பொத்த கல்வெட்டு
   4. பதுளைத் தூண் கல்வெட்டு
2. மகாவம்சத்தின் சிறப்பாகக் கருதப்படுவது
   1. மகாதாமதேரரால் எழுதப்பட்டது
   2. தனித்தனி பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது
   3. துட்டகைமுனு மன்னனை காவிய நாயகனாக சித்தரிக்கின்றது
   4. இலங்கையின் தொடர்ச்சியான வரலாற்றைக் கொண்டுள்ளது
3. புத்தசாசன வளர்ச்சி பற்றி அறிந்து கொள்ள பயன்படும் நூல்
   1. போதிவம்சம்
   2. பூஜாவலிய
   3. நிகாயசங்கிரஹய
   4. தாதுவம்சம்
4. இரண்டாகப் பிளக்கும் வகையில் துளையிடப்பட்ட மண்டையோடு கிடைக்கப்பெற்ற குகை
   1. குருவிட்ட பட்டதொம்பலென குகை
   2. பாகியன்கல குகை
   3. இராவண எல்ல குகை
   4. சித்துல்பவ்வ குகை
5. நகர நிர்வாக நடவடிக்கைகளுக்காக "நகரகுத்திக " எனும் பதவியை உருவாக்கி அதற்காக ஓர் அலுவலரை நியமித்த மன்னன்
   1. துட்டகைமுனு
   2. பண்டுகாபயன்
   3. தேவநம்பிய தீசன்
   4. வசபன்
6. "அலகபய மாகாராஜா" என கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள மன்னன்
   1. குட்டகண்ண அபயன்
   2. முதலாம் காசியப்பன்
   3. மகாசேனன்
   4. நான்காம் மகிந்தன்
7. காய்ச்சலால் பீடிக்கப்பட்ட நோயாளர்களை பராமரிக்க நிறுவப்பட்ட உபசக்கரோக நாச எனும் வைத்தியசாலையை அமைத்த மன்னன்
   1. பண்டுகாபயன்
   2. தேவநம்பியதீசன்
   3. நான்காம் காசியப்பன்
   4. ஐந்தாம் மகிந்தன்



kalvi.lk

8. நூல் நூற்பவர்கள் "ததவய" எனும் சொல்லால் அழைக்கப்பட்டதை எக்கல்வெட்டு மூலம் அறியலாம்

    1. அம்பாந்தோட்டை வெஹரகம
    2. மாத்தளை மாவட்ட எம்புல் அம்பே
    3. மாத்தளை மாவட்ட களுதிய பொகுண
    4. அநுராதபுர மாவட்ட பெரிய புளியங்குளம்

9. ஆரம்ப காலத்தில் பிரதான வீதிகளின் தூரத்தை அளப்பதற்காக நடப்பட்ட "காவுதகணு" கிடைக்கப்பெற்றுள்ள பிரதேசம்

    1. கட்டுகஹகல்கே , வெலிகத்த
    2. துனுமடலாகந்த , கொத்கந்த
    3. அலகொலவெவ , தெஹிகஹ எல்கந்த
    4. சொரபொர வெவ , கல்பாய

10. கண்டி இராச்சிய காலத்தில அரச மாளிகையின் உபயோகத்திற்கென ஒதுக்கப்பட்ட நிலம்

    1. பரவேனி
    2. விகாரகம்
    3. நிந்தகம்
    4. கபாடகம்

## வரலாறு – II

## பகுதி – I

1. கீழே (1) இல் தரப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களையும் இலங்கை தேசப்படத்திலும் , (2) இல் தரப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களையும் உலக படத்திலும் குறித்து பெயரிடுக
    1) திருகோணமலை, இரணைமடு குளம் , பருத்திதுறை, கதிர்காமம் , மகாதித்த, மிகிந்தலை , கல்ஓயா , காலித்துறைமுகம் , கும்புக்கன்ஓயா , கலாஓயா, பேராதனை , சிலாபம்
    2) நன்னம்பிக்கை முனை, மலாயாதீபகற்பம், வங்காள விரிகுடா, பிரித்தானியா, உரோம், மத்திய தரைக்கடல்

2. கீழ்வரும் A,B,C,D ஆகிய வரலாற்று தகவல்களுடன் தொடர்புடைய நபர்களை ஒழுங்குமுறையில் உங்கள் விடைத்தாளில் எழுதுக

    A. புனித வெள்ளரசு மரம் நடப்பட்ட காலத்தில் ஆட்சி புரிந்தவர்
    B. சமந்தபாஷாதிகாவ எனும் நூலை எழுதிய தேரர்
    C. இலங்கையில் புகையிரத வீதிகளை அமைத்த பிரித்தானிய ஆளுநர்
    D. 1818 கிளர்ச்சி தலைவர்



kalvi.lk

## பகுதி – II

1.

1) கற்கால யுகத்தில் மனிதன் வாழ்ந்ததாக அடையாளங் காணப்பட்டுள்ள கரையோர வெட்டவெளி பிரதேசங்கள் இரண்டினையும் தாழ்நில ஈரவலய குகை ஒன்றினையும் குறிப்பிடுக
2) இலங்கையின் கற்கால யுகத்தில் மனிதன் வாழ்ந்த சுற்றாடல் வலயங்கள் 4 தருக
3) முன்வரலாற்றுக்கால மக்களின் தொழிநுட்ப ஆற்றல்களை வெளிப்படுத்தும் சான்றுகள் இரண்டினை குறிப்பிட்டு சுருக்கமாக விபரிக்குக
4) வரலாற்றுக்கால குடியிருப்புக்களில் செல்வாக்கு செலுத்திய புவியியல் காரணிகள் இரண்டினை குறிப்பிட்டு விளக்குக

2.

1) புராதன இலங்கையில் அரசியல் அதிகாரம் மத்தியமயப்படுத்தப்பட்ட பின்னர் அரசனின் நிர்வாக நடவடிக்கைகளுக்கு உதவியாக இருந்த பின்வரும் அரச அதிகாரிகளின் பதவி பெயர்களை முறையே குறிப்பிடுக

   A. தலைமை அமைச்சர்

   B. பொருளாளர்

   C. நகர பரிபாலகர்
2) புராதன இலங்கையில் அரசுரிமையானது தந்தையிடமிருந்து மகனுக்கு கிட்டியமைக்கான சான்றுகள் இரண்டினையும் சகோதரனிடம் இருந்து சகோதரனுக்கு கிட்டியமைக்கான சான்றுகள் இரண்டினையும் முறையே குறிப்பிடுக
3) மத்திய ஆட்சியாளனான அரசனிடமிருந்து மக்கள் எதிர்பார்த்த சேவைகள் இரண்டினை குறிப்பிட்டு விளக்குக
4) அநுராதபுரத்தை ஆட்சி செய்த வசப மன்னனின் அரசியல் பொருளாதாரப் பணிகளை உதாரணங்கள் மூலம் விளக்குக

3.

1) தென்மேற்கு பிரதேசத்தில் தோற்றம் பெற்ற பின்வரும் இராசதானிகளின் ஆரம்ப ஆட்சியாளர்களின் பெயர்களை குறிப்பிடுக

   A. தம்பதெனிய

   B. கம்பளை

   C. கோட்டை
2) பின்வரும் அரசியல் நிகழ்வுடன் தொடர்புடைய ஆட்சியாளர்களின் பெயர்களை குறிப்பிடுக

   A. பொலன்னறுவை இராசதானியின் இறுதி ஆட்சியாளர்

   B. கலிங்கராயர், சோடங்கன் எனும் தென்னிந்திய தளபதிகளின் ஆக்கிரமிப்பை முறியடித்த மன்னன்

   C. கம்பளை காலத்தில் எம்பக்க தேவாலயத்தை அமைத்த மன்னன்

   D. ஸ்ரீ ஜயவர்த்தனபுர எனும் இடத்தில் பலமான கோட்டையை அமைத்த அமைச்சர்



kalvi.lk

3) தம்பதெனிய இராசதானியை ஆட்சி செய்த மிகச் சிறந்த மன்னனான இரண்டாம் பராக்கிரமபாகுவின் அரசியல் , சமய பணிகளை உதாரணங்களுடன் விளக்குக

4) இராசதானி தென்மேற்கு திசையை நோக்கி இடம்பெயர்ந்தமையை அடுத்து பொருளாதார கோலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக

4.

1) பின்வரும் ஆண்டுகளில் மலையகத்திற்கு வருகை தந்த ஆங்கிலேய தூதுவர்களை முறையே குறிப்பிடுக

   A. 1762

   B. 1782

   C. 1795

2) கீழுள்ள சம்பவங்களுடன் தொடர்புடைய நபர்களை குறிப்பிடுக

   A. இலங்கைக்கு நியமிக்கப்பட்ட முதலாவது பிரித்தானிய ஆளுநர்

   B. ஶ்ரீ விக்கிரம ராஜசிங்கனை பதவியில் அமர்த்தியவன்

   C. ஊவா – வெல்லஸ்ஸ பகுதிக்கு மடிகே பத்தவாக நியமிக்கப்பட்டவர்

   D. 1815 இல் ஆங்கில கொடியை ஏற்றிய சந்தர்ப்பத்தில் அதனை எதிர்த்த பிக்கு

3) 1803 ம் ஆண்டு பிரடரிக் நோத்தின் மலையக படையெடுப்பு தோல்வி கண்டமைக்கான காரணிகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக

4) 1848 புரட்சிக்கு ஏதுவாக அமைந்த காரணிகள் இரண்டைக் குறிப்பிட்டு விளக்குக

5.

1) கீழுள்ள A,B,C ஆகிய வினாக்களுக்கு விடை எழுதுக

   A. யாழ்ப்பாணத்தில் இயங்கிய மிஷனரி

   B. பேலியகொட வித்தியாலங்கார பிரிவெனாவை ஆரம்பித்தல்

   C. கொழும்பு சாஹிரா கல்லூரியை ஆரம்பித்தல்

2) பின்வரும் விடயங்களுடன் தொடர்புடைய நபர்களை பெயரிடுக

   A. பௌத்த பிரம்மஞான சங்கம்

   B. பௌத்த புனித இடங்களை பாதுகாக்கும் இடம்

   C. இலங்கை தேசிய சங்கம்

   D. தேசப்பற்று இயக்கம்

3) ஶ்ரீல ஶ்ரீ ஆறுமுகநாவலர் இந்துசமய மறுமலர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பு இரண்டினை விளக்குக

4) பௌத்த சமய மறுமலர்ச்சிக்காக மேற்கொள்ளப்பட்ட பணிகள் மூன்றினை விளக்குக



kalvi.lk

## பகுதி – III

1.

1) கத்தோலிக்க திருச்சபையை விமர்சித்த மூவரது பெயர்களை எழுதுக

2) பின்வரும் விடயங்களுடன் தொடர்புடைய விடைகளை எழுதுக

   A. பியெட்டா சிலையை வடிவமைத்தவர்

   B. நவீன வானியலின் தந்தை

   C. அச்சியந்திரத்தை கண்டுபிடித்தவர்

   D. கள்ளிக்கோட்டை துறைமுகத்தை வந்தடைந்த போர்த்துகேய நாடுகாண் பயணி

3) ஐரோப்பிய மறுமலர்ச்சி இலங்கையில் செல்வாக்கு செலுத்தியமையை இரண்டு உதாரணங்கள் தந்து விளக்குக

4) நாடுகாண் பயணத்திற்கு ஐரோப்பாவில் சாதகமான சூழ்நிலை பல வழிகளிலும் காணப்பட்டது என்ற கூற்றை மூன்று விடயங்களை எழுதி விளக்குக

2.

1) பின்வருவோர் கைத்தொழில் புரட்சியில் எத்துறையுடன் தொடர்புடையவர்கள் என எழுதுக

   A. ஹென்றி பேஸ்மர்

   B. ஜேம்ஸ் ஹாகிரீவ்ஸ்

   C. ஹம்பிரி டேவி

2) கைத்தொழில் புரட்சி காலத்தில் தொடர்பாடல் துறையின் கண்டுபிடிப்புகள் இரண்டையும், நெசவு துறையின் கண்டுபிடிப்புகள் இரண்டையும் தருக

3) போக்குவரத்து துறையில் கைத்தொழிற் புரட்சி காலத்தில் இடம்பெற்ற வளர்ச்சியை இரு உதாரணங்கள் மூலம் விளக்குக

4) கைத்தொழிற் புரட்சியினால் இலங்கையில் ஏற்பட்ட மாற்றங்கள் இரண்டை விளக்குக



kalvi.lk

Follow and Get papers Daily ..!

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page